[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1983 நவம்பர் 18

(பிற்பகல் 2–20)

அதுமட்டுமல்ல. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு மூன்று மாதமாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை. எனவே நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய போனஸ் பிடித்தம் செய்யபட்டிருக்கின்றது. ப்ராவிடன்ட் பண்ட் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. பாண்டியன் கூட்டுறவுச் சிறப்பங்காடியில் கடன் வாங்கியவர்களுக்கும் இந்தப் பணம் பிடித்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இப்படி பிடிக்கப்பட்ட பணத்தை எல்லாம் கட்டாமல் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மில் ஓடியாத வேண்டும். அந்த மில்லை அரசாங்கமே எடுப்பதற்குரிய வழிவகை செய்து கொடுத்தால் நல்லது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை தேதி குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 2–21 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

221. பேருந்து மற்றும் பார வண்டிகளின் அடிச் சட்டங்களை விற்கும் எந்த ஒரு வணிகருக்கும் விற்பனை வரியை 15 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 18–7–1983 ஆம் நாளிட்ட 774 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]